1968 மார்ச் 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து, அவ்வத்துறைத் தலைவர்களுடன் கலந்து ஆராயப்பட்டு வருகின்றன. இவ்வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன்பு திட்டக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த வேலைத் திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றினால், எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற முடியும் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிற கொள் அளவு 167 கோடி கன அடியாகும். புதியதாக பாசனத்திற்கு வருவது 1,000 ஏக்கராவாகவும், ஏற்கெனவே இருக்கிற பாசனத்தை உறுதிப்படுத்துவது 1,323 ஏக்கராவாகவும் இருக்கும். இதில் ஒரு டன்னுக்கு செலவு ரூ. 3,000-க்கு மேலாகிறது. அதாவது ரூ. 5,081 என்கின்ற அளவுக்கு ஒரு டன்னுக்கு செலவு ஆகிறது. இதற்காகப் போடப்பட்டிருக்கிற மொத்த மதிப்பீடு ரூ. 35.57 இலட்சமாகும்.

திரு. நா. காசிராமன் : இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை அளவு உணவுப் பொருள்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுநூறு டன் கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

Motor Vehicles Taxation Sub-Inspectors, etc.

* 331 *Q.*—THIRU N. KASIRAMAN. Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that some posts of Motor Vehicles Taxation Sub-Inspectors, Head constables and constables have been abolished with effect from 31st August 1967;

(*b*) the date from which these posts were in existence; and

(*c*) the probable savings on this account?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) மோட்டார் வண்டிகள் வரி வசூல் குறித்த பணியில் நியமிக்கப்பட்டிருந்த 14 உதவி இன்ஸ்பெக்டர்களும் 20 தலைமைக் காவலர்களும் 1—9—1967 அன்று முற்பகல் முதற்கொண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

(இ) பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப் பட்டுள்ளது.

(உ) தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 95,490 மிச்சமாகும்.

திரு. நா. காசிராமன் : 1931-ம் வருஷத்திலிருந்தே 14 ஸப்-இன்ஸ்பெக்டர்கள், 20 ஹெட் கான்ஸ்டபிள்கள் இருந்து மோட்டார் வாகனங்கள் வரி ஏய்த்தல், வேகமாக செல்லுதல், கள்ளக் கடத்தல் ஆகியவைகளைச் செக் செய்து, இந்தக் குற்றங்

@ 499–503ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இப்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனால் 14 ப்ளஸ் 20, ஆக 34 பேர்கள் வேலை இழப்பதுமட்டு மல்லாமல், குற்றங்கள் சரிவரக் கண்காணிக்கப்பட முடியாத நிலைமையும் ஏற்படுவதன் காரணமாக மறுபடியும் இதை மறு பரிசீலனை செய்து, அதுமாதிரி ஒரு ஸ்குவாடை நியமிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வரி ஏய்த்தலைக் கண்டு பிடிப்பதற்கு இப்பொழுது போக்குவரத்துத் துறையிலுள்ள மோட்டார் வெஹகிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் என்ற பொறுப்பி லுள்ளவர்களே போதுமானதாகும் என்று நாம் முடிவு செய்திருக் கிறோம். வேறு பல காரியங்கள், தவறுகள் நடைபெறுகின்றன என்றால், அவைகளை ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கு மேலுள்ள அதிகாரத்திலுள்ள காவல் துறையினர் கண்காணித்துக்கொள்ள லாம் என்ற நிலைமையும் இருப்பதனால், வீண்செலவு என்ற அளவில் ஏறத்தாழ ரூ. 1 லட்சம் ஆகிறது என்ற நிலையில் அது நிறுத்தப்பட்டுள்ளது.

திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் : மோட்டார் வாகனங்களை செக் செய்வதற்கு செக் ரிப்போர்ட்டு, மோட்டார் வெஹிகில்ஸ் இன்ஸ்பெக்டர்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஸீரியல் நம்பர் என்பது கிடையாது. ஒருவர் குற்றம் செய்தவுடன் அதைச் செக் ரிபோர்ட்டில் எழுதிவிட்டு, மறுபடியும் முதலாளி களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு அதைப் பிய்த்து எரிகிற அம்மாதிரி முறையும் நடந்துகொண்டு வருகிறது. இந்தத் தவறைப் போக்குவதற்கு செக் ரிபோர்ட்டு புஸ்தகத்தை சர்க்காரே அச்சடித்துக் கொடுக்க வேண்டும். தற்பொழுது எப்படி இருக் கிறது என்றால், பஸ் முதலாளிகளிடத்தில் செக் புஸ்தகத்தை அச்சடித்துக் கொண்டுவருகிறார்கள். இப்படி நடப்பதைத் தவிர்ப்பதற்கு, லஞ்ச ஊழலைத் தவிர்ப்பதற்கு மோட்டார் வாக னங்கள் செக் ரிப்போர்ட்டு புஸ்தகத்தை ஸீரியல் நம்பர் வைத்து அரசாங்கமே சப்ளை செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி ஆராய்ந்து உறுப்பினர் கூறுவது உண்மையானால், உரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. நா. காசிராமன் : மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகம் இல்லாத 1931-ம் வருஷத்திலிருந்து இந்தப் பதவிகளுக்கு அவசியம் உணரப்பட்டு, வருஷா வருஷத்திற்கு ஏற்றபடி இந்தப் பதவிகள் நியமிக்கப்பட்டு வருகின்றன. அப்படியிருக்கும் பொழுது இந்தப் பதவிகள் ஸூபர்ஃப்ளுவஸ், ஸர்ப்ளஸ், என்று கருதுவதற்குத் தகுந்த காரணம் ஏதாவது உண்டா? மறுபடியும் இதைப்பற்றிப் புனராலோசனை செய்ய சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவசியம் உணரப்பட்ட அளவுக்குப் பயன் அதிகம் இல்லை.